# துவாக்குடி நகராட்சி

| Date of Meeting of the Council | MCR No. | Serial Number and subject in the Agenda | Decision of Council |
|---|---|---|---|
| 23.07.2018 | | **2018ம் ஆண்டு ஜூலை மாதம் 23–ம் தேதி திங்கள்கிழமை மாலை 04.30 மணிக்கு துவாக்குடி நகராட்சி அலுவலகத்தில் கீழ்கண்ட பொருள்கள் குறித்து ஆலோசித்து முடிவெடுக்க சாதாரணக் கூட்டம்நடைபெறும்.**<br><br>**தனி அலுவலர்,**<br>**துவாக்குடி நகராட்சி.** | |
| 23.07.2018 | 191 | **<u>பொருள் எண். 1</u>**<br>துவாக்குடி நகராட்சிக்கு 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக திருவெறும்பூர், கூத்தைப்பார் பேரூராட்சிகள் மற்றும் துவாக்குடி நகராட்சி, மண்டல பொறியியல் கல்லூரி மற்றும் வழியோர பகுதிகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் நடைமுறைபடுத்தப்பட்டு அதன் வாயிலாக துவாக்குடி நகராட்சிக்கு துவாக்குடியில் 5.00 லட்சம் லிட்டர் கொள்ளளவும் மற்றும் பெரியார் திடலில் 16.50 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட இரண்டு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டு பொது மக்களுக்கு சுத்திகரிக்கப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு வந்தது. மேலும் 2009 ஆம் ஆண்டு அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தில் 5–வது வார்டு பெல்நகர் பகுதியில் 2.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், 2015 –ம் ஆண்டு தன்னிறைவுத்திட்டத்தின் கீழ் 15–வது வார்டு முத்துராமலிங்க தேவர் சாலை பகுதியில் 5.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு, மொத்தமாக 4 மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் மூலமாக 7 குடிநீர் விநியோக மண்டலங்களாக பிரிக்கப்பட்டு தினசரி 3.00 மில்லியின் லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் பொது மக்களுக்கு 77 லிட்டர் நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு என்ற அடிப்படையில் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இந்நகராட்சியில், மொத்தமுள்ள 8368 குடியிருப்புகளில் 3749 குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 3080 குடியிருப்புகளுக்கு புதியதாக குடிநீர் இணைப்புகள் வழங்கும் பணிக்காக TUFIDCO மூலம் வட்டியில்லா கடனாக ரூ. 110.00 லட்சத்திற்கு பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.<br>மேலும், 29.06.2018 அன்று நடைபெற்ற ஆய்வுக் கூட்ட நடவடிக்கையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் அறிவுறுத்தியதற்கிணங்க அனைத்து பகுதிகளுக்கும் தினமும் சீரான குடிநீர் வழங்க ஏதுவாக தற்போதுள்ள குடிநீர் வினியோக முறையை (Distribution System) சரிசெய்து அனைத்து பகுதிகளுக்கும் ஒரே மாதிரியான குடிநீர் அழுத்தத்துடன் கூடிய வினியோக முறையாக (District Metering Area) மாற்றி அமைக்க கலந்தாலோசகர் நியமித்து விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யவும், மேலும் | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | | இதற்கான செலவினத்தை Project Development Grant Fund (PDGF) அல்லது Project Preparatory Fund (PPF) நிதியின் கீழ் மேற்கொள்ளவும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு : –** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க. எண். 549 /2018/இ1** | |
| 23.07.2018 | 192 | **<u>பொருள் எண். 2</u>**<br>இந்நகராட்சி ந.க.எண். 414/எச்1/2018 நாள். 08.05.2018 எண்ணிட்ட உத்திரவின்படி M/s. ஜனதா ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், திருச்சிராப்பள்ளி நிறுவனத்தின் மூலம் இந்நகராட்சியின் பொது சுகாதார பிரிவு வாகனம் TN 45 AY 0474 டிப்பர் லாரியின் பழுதுகள் நீக்கம் செய்து அதற்குரிய பட்டியல் தொகை ரூ. 1,15,050/– வரப்பெற்றுள்ளது, எனவே மேற்கண்ட பில்பட்டியல் தொகை ரூ. 1,15,050/– ஐ M/s. ஜனதா ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், திருச்சிராப்பள்ளி நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு : –** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க. எண். 414 /2018/ எச்1** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| 23.07.2018 | 193 | **<u>பொருள் எண். 3</u>**<br>துவாக்குடி நகராட்சியின் பொறியாளர் மற்றும் பொதுப்பணி மேற்பார்வையாளருக்கு நகராட்சியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதை இணையதளத்தில் மின்னனு டெண்டர் பதிவேற்றம் செய்வதற்கு ஏதுவாக இருவருக்கும் Digital Signature Certificate வாங்குவதற்கு உண்டான செலவினத் தொகை ரூ. 5200/– Digital Identity திருச்சி நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு : –**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். இ1 / 727 / 2016** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| 23.07.2018 | 194 | **<u>பொருள் எண். 4</u>**<br>நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 12503/2018/ஆர் நாள். 29.05.2018–ன்படி 1.10.2018–ம் தேதி முதல் தொழில்வரி உயர்வு செய்வது தொடர்பான விளம்பரத்தினை தினமலர் நாளிதழில் 21.06.2018–ம் தேதி பிரசுரம் செய்தமைக்கு தொகை ரூ. 7844/– மட்டுமே வழங்க கோரி பிரைட் அட்வர்டைசிங் நிறுவனத்திடமிருந்து பில் பட்டியல் வரப்பெற்றுள்ளது, எனவே மேற்படியான நிறுவனத்திற்கு தொகை ரூ. 7844/– மட்டும் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு : –**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். எச்1 / 911 / 2018** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr>
<td>23.07.2018</td>
<td>195</td>
<td><u>பொருள் எண். 5</u><br>இந்நகராட்சியின் பொது சுகாதார பிரிவிற்கு 2018–19 ம் ஆண்டிற்கு பொது சுகதார பணிகள் மேற்கொள்ள தேவையான கிருமி நாசினிகளான பினாயில், பிளீச்சிங் பவுடர், சுண்ணாம்பு தூள், அபேட், பைரித்திரம் மருந்துகள் மற்றும் ஆசிட் வாங்குவதற்குண்டான உத்தேச செலவினம் ரூ. 300000/– க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : –<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். எச்1 / 937 / 2018</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>23.07.2018</td>
<td>196</td>
<td><u>பொருள் எண். 6</u><br>இந்நகராட்சியின் பொது சுகாதார பிரிவிற்கு 2018–19 ம் ஆண்டிற்கு பொது சுகதார பணிகள் மேற்கொள்ள தேவையான தளவாட சாமான்கள் வாங்குவதற்குண்டான உத்தேச செலவினம் ரூ. 1,40,000/– க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : –<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். எச்1 / 1022 / 2018</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>23.07.2018</td>
<td>197</td>
<td><u>பொருள் எண். 7</u><br>இந்நகராட்சி அம்மா உணவகத்திற்கு தேவையான இட்லி, சாம்பார் சாதம், தயிர் சாதம் விற்பனை ரசீதுகள் கீழ்கண்ட விவரப்படி அச்சிட்டு வழங்கியமைக்கு தொகை ரூ. 20768/– மட்டும் வழங்க கோரி தமிழ்நாடு கூட்டுறவு அச்சகம், திருச்சிராப்பள்ளி என்ற நிறுவனத்திடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது.
<table>
<tr><td>வ.எண்</td><td>விவரம்</td><td>டோக்கன் எண்ணிக்கை ( எண் )</td><td>தொகை</td></tr>
<tr><td>1</td><td>இட்லி டோக்கன்</td><td>100000 ( 226701 முதல் 326700 வரை)</td><td>ரூ. 8800/–</td></tr>
<tr><td>2</td><td>சாம்பார் சாதம் டோக்கன்</td><td>50000 ( 286288 முதல் 336288 வரை)</td><td>ரூ. 4400/–</td></tr>
<tr><td>3</td><td>தயிர் சாதம் டோக்கன்</td><td>50000 ( 270644 முதல் 320644 வரை)</td><td>ரூ. 4400/–</td></tr>
<tr><td></td><td></td><td>மத்திய சரக்கு மற்றும் சேவை வரி<br>மாநில சரக்கு மற்றும் சேவை வரி</td><td>ரூ. 1584/–<br>ரூ. 1584/–</td></tr>
<tr><td></td><td></td><td></td><td>ரூ. 20768/–</td></tr>
</table>
மேற்படியான நிறுவனத்திற்கு தொகை ரூ. 20768/– மட்டும் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : – மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். அ1 / 316 / 2016</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| 23.07.2018 | 198 | **பொருள் எண். 8** | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
|---|---|---|---|

துவாக்குடி நகராட்சியின் பொது நிதி 2018–19 –ன் கீழ் திடக்கழிவு மேலாண்மை மேற்கொள்ள கீழ்கண்ட பணிகள் செய்ய 19.07.2018–ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | திடக்கழிவு மேலாண்மை மேற்கொள்ள தள்ளுவண்டி மற்றும் அதற்கு தேவையான பின்கள் வாங்குதல் | 5.00 | ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்பரேஷன், நாமக்கல்<br><br>திருச்செங்கோடு அக்ரோ இன்ஜினியரிங் அன்டு சர்வீஸ் | மதிப்பீட்டை விட 0.93 % குறைவு<br><br>மதிப்பீட்டை விட 0.17 % அதிகம் |
| 2. | திடக்கழிகளை கொண்டு உரம் தயார் செய்யும் மையத்திற்கு மூன்று எண்ணிக்கை மின் மோட்டார் வாங்குதல் | 9.90 | ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்பரேஷன், நாமக்கல்<br><br>திருச்செங்கோடு அக்ரோ இன்ஜினியரிங் அன்டு சர்வீஸ் | மதிப்பீட்டை விட 0.15 % குறைவு<br><br>மதிப்பீட்டை விட 2.24 % அதிகம் |

**அலுவலக குறிப்பு : –** குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியை அனுமதித்து வேலை உத்திரவு வழங்கலாம்.

**ந.க.எண். 1132 /2018/எச்1**

<table>
<tr>
<td>23.07.2018</td>
<td>199</td>
<td>துவாக்குடி நகராட்சியின் பொது நிதி (குடிநீர் நிதி) 2018–19 –ன் கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.<br>எண்</th><th>வேலையின் விபரம்</th><th>மதிப்பீடு<br>(ரூ.இலட்சத்தில்)</th></tr>
<tr><td>1.</td><td>துவாக்குடி நகராட்சியின் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளை இயக்குவதற்கு ஆட்கள் சப்ளை செய்தல்</td><td>8.00</td></tr>
</table>
அலுவலக குறிப்பு : – ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>
ந.க.எண். 1137 /2018/இ1</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>23.07.2018</td>
<td>200</td>
<td><u>பொருள் எண். 10</u><br><br>
துவாக்குடி நகராட்சியில் 2018–19ம் ஆண்டிற்கு பொது நிதியின் கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது
<table>
<tr><th>வ.<br>எண்</th><th>வேலையின் விபரம்</th><th>மதிப்பீடு<br>(ரூ.இலட்சத்தில்)</th></tr>
<tr><td>1</td><td>துவாக்குடி நகராட்சி 15–வது வார்டு வன்னியர் நகரில் உள்ள குவாரியினை சுற்றி பாதுகாப்பு சுவர் கட்டுதல்</td><td>9.00</td></tr>
</table>
அலுவலக குறிப்பு : – ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>
ந.க.எண். 1169 /2018/இ1</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

______________ X ______________